*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை - 4*
*01 01 2026 THURSDAY 6 45 AM*
*வணக்கம் - மாநில செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

1. *2026 ஆங்கிலப் புத்தாண்டு வெகுவிமரிசையுடன் வரவேற்கப்பட்டது. இந்நாளையொட்டி, தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.*

2. *உங்கள் பணம் - உங்கள் உரிமை இயக்கத்தின் மூலம், உரிமை கோரப்படாமல் இருந்த 4 ஆயிரத்து 200 கோடி ரூபாய் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.*

3. *சென்னை எழும்பூர் மற்றும் தாம்பரத்திலிருந்து புறப்படும் சில ரயில்களின் புறப்படும் நேரம் இன்று முதல் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.*

4. *ராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களின் சில பகுதிகளில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

5. *அஹமதாபாதில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Sonal Patil – Bela Tamhankar இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*>>>>>><<<<<*

*2026 ஆங்கிலப் புத்தாண்டு வெகுவிமரிசையுடன் வரவேற்கப்பட்டது.*

*இந்நாளையொட்டி, தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.*

*ஆளுநர் திரு. ஆர்.என். ரவி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், இந்த புத்தாண்டின் விடியல் புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கையையும், புதிய வாய்ப்புகளையும், வலுவான உறுதியையும் உருவாக்கி, வாழ்க்கையை மகிழ்ச்சி, நல்ல ஆரோக்கியம் மற்றும் செழிப்புடன் உருவாக்கட்டும் என்று கூறியுள்ளார்.*

*ஒற்றுமையையும், நல்லிணக்கத்தையும் நிலைநிறுத்துவதற்கும், நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கு ஒன்றிணைந்து முன்னேறவும், நமது கூட்டுறுதியை மீண்டும் உறுதிப்படுத்துவோம் என்று ஆளுநர் தெரிவித்துள்ளார்.*

முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்தியில், அமைதியும், நல்லிணக்கமும், மகிழ்ச்சியும். புதிய வெற்றிகளும் நிறைந்த ஏற்றமிகு ஆண்டாக 2026ஆம்ஆண்டு அமைந்திட வாழ்த்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் விடுத்துள்ள செய்தியில், கடந்த ஆண்டில் மக்கள் நலனை அடிப்படையாக கொண்டு சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதைப் போன்று இந்த ஆண்டிலும் சீர்திருத்த நடவடிக்கைகள் தொடரும் என்று கூறியுள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான பயணத்தில் புத்தாண்டு முக்கியப் பங்கு வகிக்கும் என்று டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, நாகை மாவட்டம், வேளாங்கண்ணி பேராலயத்தில் நள்ளிரவு நடைபெற்ற புத்தாண்டு கொண்டாட்டம் கோலாகலமாக நடைபெற்றதாகவும், இதில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - செல்வன் ஜெபராஜ் 45 செகண்ட்ஸ்)

இந்த புத்தாண்டில் மக்கள் அனைவரும் எல்லா வளமும் பெற்று நல்வாழ்வு வாழ விருப்பம் தெரிவித்து வாழ்த்துவதாக, தருமபுரி பேராலயத்தில் நடைபெற்ற புத்தாண்டு கொண்டாட்டத்தில் பங்கேற்ற ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – பொதுமக்கள் 22 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<

உங்கள் பணம் - உங்கள் உரிமை இயக்கத்தின் மூலம், உரிமை கோரப்படாமல் இருந்த 4 ஆயிரத்து 200 கோடி ரூபாய் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை இந்த இயக்கம், நாடுமுழுவதும் 748 மாவட்டங்களில் 10 கட்டங்களாக நடைபெற்றதாக கூறப்பட்டுள்ளது.

இந்த சேவையின் மூலம், இதுவரை கோரப்படாமல் இருந்த வங்கி வைப்புத் தொகைகள், காப்பீட்டு தொகைகள், பரஸ்பர நிதி மற்றும் பங்குகள் நிதி ஆகியவை உரியவர்களிடம் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் இந்த இயக்கம் வெற்றிகரமாக நிறைவடைந்ததாக மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

புதிதாக இயற்றப்பட்டுள்ள, வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதாரச் சட்டத்தின் கீழ், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்ட பயனாளிகள் முழுப் பயன் பெறுவார்கள் என்று மத்திய ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

நாடுமுழுவதும் இத்திட்டத்தை செயல்படுத்தும் பிரதிநிதிகளுடன் காணொலி வாயிலாக உரையாற்றிய அவர், இதனை தெரிவித்தார்.

>>>>>><<<<<

நாட்டில் கடந்த நவம்பர் மாதத்தில் அகண்ட அலைவரிசை சந்தாதாரர்களின் எண்ணிக்கை 100 கோடியை கடந்தது.

இதுகுறித்து தொலைத்தொடர்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த பத்தாண்டுகளில் அகண்ட அலைவரிசை சந்தாதாரர்களின் எண்ணிக்கை 6 மடங்கிற்கு மேல் அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு 13 கோடி என்ற அளவிற்கு இருந்த இந்த சந்தாதாரர்களின் எண்ணிக்கை, கடந்த நவம்பர் மாத த்தில் 100 கோடியே 37 லட்சத்தை எட்டியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

*மத்திய அரசின் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.*

*இந்த இயக்கத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ள புதிய அம்சங்கள், தங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் - பயனாளிகள் 25 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<*

*தமிழக அரசின் சிட்கோ மூலம், மூலிகை அழகு சாதன பொருட்கள் மற்றும் தோல் பராமரிப்பு பொருட்கள் தயாரித்தல் தொடர்பான பயிற்சி, வரும் 6ஆம் தேதி முதல் 8ஆம் தேதிவரை சென்னை, ஈக்காட்டுதாங்கலில் நடைபெறுகிறது.*

*இதேபோல். செயற்கை நுண்ணறிவு மற்றும் டிஜிட்டல் சந்தைப்படுத்துதல் குறித்த பயிற்சி இம்மாதம் 7ஆம் தேதி முதல் 9ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.*

*இந்த பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர் www.editn.in என்ற இணையதளத்தில் தகவல்களை தெரிந்து கொள்ளலாம் என்று மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<*

*சென்னை எழும்பூர் மற்றும் தாம்பரத்திலிருந்து புறப்படும் சில ரயில்களின் புறப்படும் நேரம் இன்று முதல் மாற்றியமைக்கப்பட்டுள்ளது*

*சென்னை எழும்பூரிலிருந்து புறப்படும் நெல்லை விரைவு ரயில், திருச்சி சோழன் விரைவு ரயில், செங்கோட்டை பொதிகை விரைவு ரயில், தூத்துக்குடி முத்துநகர் விரைவு ரயில், மதுரை வைகை அதிவிரைவு ரயில், திருநெல்வேலி வந்தேபாரத் ரயில், ராமேஸ்வரம் சேது விரைவு ரயில் ஆகியவற்றின் புறப்படும் நேரம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.*

இதேபோல், தாம்பரத்திலிருந்து புறப்படும் கொல்லம், குருவாயூர் விரைவு ரயில் மற்றும் ராமேஸ்வரம் விரைவு ரயில் ஆகியவற்றின் புறப்படும் நேரமும் இன்றுமுதல் மாற்றியமைக்கப்படுவதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<

இருவரிச் செய்திகள்

புத்தாண்டில் இந்தியாவுடன் மேலும் வலிமையான நட்புறவை ஏற்படுத்த விரும்புவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<

செயற்கை நுண்ணறிவு திறன் மேம்பாட்டு சிறப்பு திட்டத்தை குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று புதுதில்லியில் தொடங்கி வைக்கிறார்.

>>>>>><<<<<

விமானப்படை துணைத்தளபதி ஏர்மார்ஷல் நர்மதேஷ்வர் திவாரி, பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

>>>>>><<<<<

பெங்களூருவில் இந்திய விளையாட்டு ஆணைய மையத்தில், உயர் திறன் மையத்திற்கு மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா அடிக்கல் நாட்டினார்.

>>>>>><<<<<

மத்தியபிரதேசத்தின் இந்தூர் மாவட்டத்தில் மாசு கலந்த தண்ணீரை அருந்தி உயிரிழந்த 8 பேரின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாய் நிவாரணத் தொகையை அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

>>>>>><<<<<

தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் பிரிவுகளை செயல்படுத்துவது குறித்து, ஆட்சியர் திரு. இளம்பகவத் ஆய்வு செய்தார்.

>>>>>><<<<<

திருப்பத்தூர் மாவட்ட காவல்துறை சார்பில் நடைபெற்ற மக்கள் குறைதீர் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட 30 மனுக்கள் மீது, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று காவல் கண்காணிப்பாளர் திருமதி. சியாமளா தேவி தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<

*கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் லஞ்சம் பெற்ற குடும்ப வன்முறை தடுப்புச் சட்ட பாதுகாப்பு அலுவலர் கைது செய்யப்பட்டார்.*

*>>>>>><<<<<*

*ராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களின் சில பகுதிகளில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*மீனவர்களுக்கான எச்சரிக்கையை பொறுத்தவரை, தென்தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா பகுதிகள் மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் நாளை முதல் 3 நாட்களுக்கு சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.*

*>>>>>><<<<<*

*விளையாட்டுச் செய்தி*

*அஹமதாபாதில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Sonal Patil – Bela Tamhankar இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்த இணை 6-3, 6-3 என்ற செட்கணக்கில் மற்றொரு இந்திய இணையான Akansha Dileep – Soha Sadiq இணையை வென்றது.*

*>>>>>><<<<<*